**செய்தி வெளியீடு எண் : 1410** **நாள் : 14.08.2022**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மாவட்டத்தில் 75-வது சுதந்திர திருநாள் அமுதப்பெருவிழா கொண்டாட்டத்தை தொடர்ந்து இன்று (14.08.2022) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், ஆத்துப்பாக்கம் ஊராட்சிமன்ற அலுவலகத்தில் வருகிற சுதந்திர தினத்தன்று ஊராட்சிமன்ற தலைவர் தேசிய கொடியை ஏற்றி வைப்பதை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் தொடர்பாகவும், ஆகஸ்ட் 13 முதல் ஆகஸ்ட் 15 வரை அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்ற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாகவும் தலைமைச் செயலாளர் முனைவர்.வெ.இறையன்பு,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் டாக்டர்.தாரேஸ் அஹமது,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தேசிய கொடிகளை உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 75-வது சுதந்திர தினம் 15.08.2022 அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, தலைமைச் செயலாளர் முனைவர்.வெ.இறையன்பு,இ.ஆ.ப., அவர்கள் 12.08.2022 அன்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் எழுதிய கடிதத்தில் சுதந்திர தின விழாவில் சென்னை தலைமைச் செயலகம் முதற்கொண்டு கிராம ஊராட்சிகள் வரை அனைத்து தலைமை அலுவலக வளாகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைப்பது மரபாகும். ஒரு சில கிராம ஊராட்சிகளில் சாதிய பாகுபாடுகள் காரணமாக தேசிய கொடியை ஏற்றுவதில் பிரச்சனைகளோ, தேசிய கொடியையும் அதனை ஏற்றுபவரையும் அவமதிக்கும் செயலோ நடைபெறலாம் என தகவல் பெறப்பட்டுள்ளது. எனவே, அரசமைப்பு சட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் சாதி அல்லது பழங்குடியினரை சேர்ந்த நகராட்சி, ஊராட்சி மன்ற தலைவர், உறுப்பினர் அலுவலக பணியில் உள்ளவர் என எவரையும் அவரது அலுவலக பணிகளையும். கடமைகளையும் செய்ய விடாமல் தடுப்பதோ, அல்லது அச்சுருத்துவதோ தண்டனைக்குரிய குற்றமாகும்

இதனை கருத்தில் கொண்டு எதிர்வரும் 75-வது சுதந்திர தின அமுதபெருவிழாவில் எவ்வித சாதிய பாகுபாடின்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை கொண்டு அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளின் தலைமை அரசு அலுவலகங்களில் தேசிய கொடியை ஏற்றி மரியாதை செலுத்துவதை உறுதி செய்யுமாறும், அதனை தொடர்ந்து நடைபெறும் கிராம சபை கூட்டத்திலும் எவ்வித சாதிய பாகுபாடின்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், பொதுமக்கள் போன்றோர் பெருமளவில் கலந்துகொள்வதை உறுதி செய்யுமாறும் தலைமை செயலாளர் அவர்கள் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 526 கிராம ஊராட்சி மன்றங்களிலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரே தேசிய கொடியை ஏற்றுவது குறித்து அனைத்து கிராம, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், இப்பொருள் குறித்து பத்திரிக்கைச் செய்தி அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள்

வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், ஆத்துப்பாக்கம் ஊராட்சியில் கடந்த 2020-ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று ஆத்துப்பாககம் ஊராட்சி மன்ற தலைவர் தேசிய கொடியை ஏற்றுவதில் சில பிரச்சனைகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, தற்பொழுது அவ்வூராட்சியில் ஊராட்சிமன்ற தலைவரே தேசிய கொடி ஏற்றுவதில் ஏதேனும் தடைகள் உள்ளதா என்பது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுககிணங்க பல்வேறு துறை அலுவலர்கள் மூலமாக அவ்வூராட்சியில் ஆய்வு செய்யப்பட்டது. நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அவ்வூராட்சிக்கு நேரடியாக சென்று கள ஆயவு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து அவ்வூராட்சிக்கு தலைமைச் செயலாளர் அவர்களே இன்று நேரில் சென்று ஊராட்சி மன்ற தலைவர், துணைத் தலைவர் ஊராட்சிமன்ற உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்களோடு நேரடியாக கலந்துரையாடினார்.. இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் டாக்டர்.தாரேஸ் அஹமது,இ.ஆ.ப., அவர்கள்;, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பா.சீபாஸ் கல்யாண்,இ.கா.ப., அவர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் முன்னிலையில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. அக்கலந்தாய்வில் ஊராட்சி மன்றத்தில் உள்ள பொது பிரச்சனைகள் குறித்தும், 75-வது சுதந்திர தின விழாவில் ஊராட்சி மன்ற தலைவர் தேசிய கொடியை ஏற்றுவது குறித்தும், அதனைத் தொடாந்து நடைபெறவுள்ள கிராம சபை கூட்டத்தை சுமுகமாக நடத்துவது குறித்தும் கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டது. சுதந்திர தினத்தன்று இவ்வூராட்சியில் எவ்வித பிரசசனைகளும் நடைபெறாத வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள தலைமையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை தலைமைச் செயலாளர் அவர்கள் உறுதி செய்து, தேசிய கொடிகளை உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், ஆத்துப்பாக்கம் ஊராட்சியில் தலைமைச் செயலாளர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் ஊராட்சிமன்ற தலைவர் திருமதி.அமிர்தம் அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார். தேசிய கொடிக்கு அனைவரும் மரியாதை செலுத்தினர்.

அதன் பின்னர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்; ஆகியோர் 75-வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு, ஆத்துப்பாக்கம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெறவுள்ள பகுதியை உள்ளாட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ரூபேஷ் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திரு.கே.எம்.எஸ். சிவக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.வாசுதேவன் மற்றும் திரு.நடராஜன், கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் திரு.கண்ணன், துணைத் தலைவர் திருமதி.ரேவதி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in